**லுணுகம்வெஹெர பிரதேச சபை**
**அம்பாந்தோட்டை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 02 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மே 27 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 15 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து லுணுகம்வெஹெர பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

2010 சனவரி 19 ஆந் திகதிய PED/54 ஆம் இலக்க பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின்படி 2011 சனவரி 01 ஆந் திகதி முதல் உள்ளூராட்சி நிறுவனங்களினால் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அந்த நியமங்கள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் ஆகஸ்ட் மாதத்தில் இரண்டு வேலைகளுக்காக செலுத்துவதற்கு ரூபா 740,523 கூட்டுத்தொகையான பணம் கிடைத்திருந்ததுடன் அந்தப் பணம் ரூபா 790,242 ஆக ரூபா 49,719 தொகை அதிகரித்து பேரேட்டில் பிரதி செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மகநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட 07 வேலைகளுக்காக மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய ரூபா 3,497,920 தொகையொன்று கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) முத்திரைக் கட்டணம் கணக்கு வைத்தல் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

i. மீளாய்வாண்டிற்குரிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 290,000 ஆக இருந்த போதிலும் வருமானச் செலவினக் கணக்கில் ரூபா 1,076,244

தொகை செலவு வைக்கப்பட்டிருந்தது. இந்த மீதியில் 2008 ஆம் ஆண்டிற்குரியதாக கிடைத்த ரூபா 869,744 தொகையும் உள்ளடங்கியிருந்தது.

ii. மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 516,925 ஆக இருந்த போதிலும் கணக்கின் படி அது ரூபா 264,500 ஆகும். அதன் படி ரூபா 252,425 தொகை குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) 2012 ஆம் ஆண்டிற்காக வருடாந்த பராமரிப்புச் செலவினமாக தனியார் நிறுவனமொன்றிலிருந்து 2013 பெப்ரவரி 06 ஆந் திகதி கிடைத்த ரூபா 25,000 தொகையொன்று திரண்ட நிதியத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்காமல் ஆண்டின் வருமானமாக 1/60 ஏனைய வருமானக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டில் 2014 பெப்ரவரி 20 ஆந் திகதி அறிவித்தல் பதாதைக் கட்டணமாக தனியார் நிறுவனமொன்றிலிருந்து ரூபா 40,000 தொகை கிடைத்திருந்ததுடன் இந்தத் தொகை மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டின்போது செலுத்தப்பட்ட முன்னைய ஆண்டுகளுக்குரிய ரூபா 25,401 தொகையான செலவினம் திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்படாது ஆண்டின் செலவினமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(எ) சாதாரண சேமிப்புக் கணக்கில் ரூபா 250,000 தொகையொன்று சபை நிதியத்திற்கு மாற்றப்பட்டிருந்ததுடன் அது காசுக் கணக்கில் வரவு வைக்கப்படாது நாட்குறிப்புப் பதிவு 10 மூலம் ஏனைய வருமானக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. 2013 ஒக்தோபர் 15 ஆந் திகதிய 9740 ஆம் இலக்க அடியிதழில் ஏனைய வருமானக் கணக்கில் (1-60) செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஏ) ஆண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 21,590 தொகையான உபரகணங்கள் மற்றும் காகிதாதிகள் இறுதியிருப்பிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

06 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்கிற்கும் பட்டோலைகளுக்குமிடையே ரூபா 43,622 தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

ரூபா 24,279,522 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான அவசியமான பட்டோலைகள், நாளதுவரையாக்கப்பட்ட பதிவேடு, மீதி உறுதிப்படுத்தல், காலப்பகுப்பாய்வு மற்றும் வங்கி பாஸ் புத்தகங்கள் போன்ற தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 60,538 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 547,840 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

**நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினர்களிடமிருந்தும் ரூபா 449,592 கூட்டுத்தொகையான நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் அறவிடவேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 ஒப்பந்த நிர்வாகம்

பிளிசறு செயற்திட்டத்தின் மூலம் அமுல்படுத்தப்பட்ட சிறிய அளவிலான கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்திட்டத்திற்காக நிதி உதவி வழங்குவதற்கு மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் இணங்கப்பட்டிருந்ததுடன் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தலைவரின் 2012 நவம்பர் 01 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் 12 நிர்மாண நடவடிக்கைகளுக்காக ரூபா 5,171,134 தொகையான நிதியேற்பாடு அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

i. நிர்மாண நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காக 2012 நவம்பர் 01 ஆந் திகதி ரூபா 984,978 முற்பணத் தொகை வழங்கப்பட்டிருந்த போதும் கணக்காய்வுத் திகதியான 2014 பெப்ரவரி 13 ஆந் திகதி வரையிலும் மூன்று செயற்பாடுகள் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

ii. நிதியேற்பாடு அங்கீகரிக்கப்பட்டு முற்பணம் வழங்கி ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2014 பெப்ரவரி 13 ஆந் திகதி வரையிலும் ஏனைய நிர்மாண நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காக தகுதியான ஒப்பந்தக்காரர்களை தெரிவு செய்தல் மற்றும் ஏனைய நடவடிக்கைகளேனும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

(அ) வருடாந்த பாதீட்டின் மூலம் அடைந்து கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட வருமான இலக்கை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்ததுடன் பாதீடு செய்யப்பட்ட வருமானம் மற்றும் உள்ளபடியான வருமானங்களுக்கிடையே உயர்ந்த முரண்னொன்றைக் காண்பித்திருந்தது. அதன்படி பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்தி முன்மொழிவுகள் எதுவும் பாதீட்டில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-----------------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(இ) ஒப்பந்த நிர்வாகம்